70

170

# திருக்குறள்

## மூலமும் - உரையும்

### இரண்டாம் பாகம்

[ II-ம் பாரம் : 7-ம் வகுப்பு ]

OFFICE OF THE REGISTRAR OF

20 OCT 1948

MADRAS

வித்துவான் அ. வடிவேலன்

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ்
கும்பகோணம்

TB
031, 1C5(7)
N48
86703.

# திருக்குறள்

(மூலமும் உரையும்)

## இரண்டாம் பாரம்

அல்லது

### ஏழாம் வகுப்புக்கு

[கல்வி இலாகா புதிதாக வெளியிட்டுள்ள 60 குறள்கள் அடங்கியது]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 OCT 1948
MADRAS

வித்துவான் அ. வடிவேலன்,
தலைமைத் தமிழாசிரியர்,
கல்யாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 3½ அணா

86703
TB
031,105(4)
N48

# முன்னுரை

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

—பாரதியார்

திருக்குறள் எச்சமயத்தினருக்கும், எக்காலத்தினருக்கும், எந்நாட்டினருக்கும் பொதுவாகிய நீதிகளை உணர்த்தும் ஓர் ஒப்பற்ற செந்தமிழ் நூல். திரு+குறள் = திருக்குறள். திரு-நூலின் சிறப்புப்பற்றி வந்த அடைமொழி; குறள்—குறுகிய வெண்பாக்களாலாகிய நூல் பெரும்பாலும் வெண்பாக்கள் நான்கு அடிகளைக் கொண்டவையாகும். ஆனால் குறள்வெண்பாக்கள் இரண்டு அடிகளைக் கொண்டவையாகும்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளையுடையது; அதிகாரத்துக்குப் பத்துக் குறள் வெண்பாக்களாக 133 அதிகாரங்கள் கொண்டது; 1,330 குறட்பாக்களையுடையது.

ஆசிரியர்: திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் மைலாப்பூரில் பிறந்தனர் என்பர் இவருடைய திருக்கோயில் ஒன்று மைலாப்பூரில் இருப்பதை இன்றும் காணலாம். இவர் மதுரையில் தோன்றி வாழ்ந்தவர் என்றும் சிலர் கூறுவர். இவரது பிறப்பினைப்பற்றியும், வாழ்க்கையினைப்பற்றியும் பலர் பலவாருகக் கூறுவர். ஆனால் எல்லாவற்றையும் உண்மையெனக் கொள்ளுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை. கற்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறும் வாசுகியம்மையார் இவரது மனைவி. இவரது காலம் கடைச்சங்க காலம்; அதாவது இவர் 1800 ஆண்டுகட்குமுன் வாழ்ந்தனர்.

அரசாங்கத்தார் 1948-ல் வெளியிட்டுள்ள பாட திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 60 குறள்களின் அதிகாரப் பெயர், அதன் பொருள், உரை நடை, பதவுரை, கருத்துரை, விளக்கவுரையுடன் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. தமிழுலகம் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

—ஆசிரியர்

# இப்புத்தகத்திலுள்ள குறட்பாக்களின் அகரவரிசை


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அகனமர்ந்து | 3 | காலத்தினால் | 5 |
| அஞ்சாமை | 14 | குற்றம் இலனாய் | 29 |
| அடுக்கிய | 28 | கொக்கொக்க | 18 |
| அடுத்தது | 26 | சூழ்ச்சி முடிவு | 25 |
| அரங்கின்றி | 18 | தம்மின் பெரியார் | 17 |
| அரியவென்று | 20 | தள்ளாவிளை | 26 |
| அருமையுடைத் | 23 | தனக்குவமை | 1 |
| அழுக்காறென | 8 | தன்குற்றம் | 16 |
| அறத்தான் | 1 | துளியின்மை | 21 |
| அறனறிந்து | 8 | தொட்டனைத்து | 15 |
| அறிவுடையார் | 16 | நிறைநீர | 27 |
| அன்பிறகு | 2 | நெடும்புனலுள் | 19 |
| அன்புநாண் | 29 | பகச் சொல்லி | 9 |
| அன்பின்வழி | 3 | பணிவுடையன் | 4 |
| இரவார் | 30 | பயன்மரம் | 10 |
| இலனென்று | 9 | பழிமலைந்து | 24 |
| இன்பம் விழை | 23 | பிறர்க்கின்னா | 13 |
| ஈதல் | 11 | பீலிபெய் | 18 |
| ஈத்துவக்கும் | 10 | பெருங்கொடையான் | 20 |
| ஈன்றபொழுதிற் | 2 | பெருமைக்கும் | 20 |
| உள்ளத்தால் | 12 | மடிமை | 22 |
| உள்ளமுடைமை | 22 | மயிர்நீப்பின் | 28 |
| எண்ணிய | 25 | மருவுக | 27 |
| எல்லா விளக்கும் | 12 | மறத்தல் | 13 |
| எல்லார்க்கும் | 6 | மனத்தானாம் | 17 |
| எனைத்தானும் | 16 | மேலிருந்தும் | 28 |
| ஒழுக்கத்தின் | 7 | வன்கண் குடி | 24 |
| ஒழுக்கமுடைமை | 6 | வாணிகம் | 5 |
| ஒறுத்தார்க்கு | 7 | வானுயர் | 11 |
| கண்ணுடையர் | 14 | வேலன்று | 21 |

## திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

நாயனார்
தேவர்
முதற்பாவலர்
தெய்வப்புலவர்
நான்முகனார்
மாதாநுபங்கி
செந்நாப்போதார்
பெருநாவலர்

## திருக்குறளின் வேறு பெயர்கள்

முப்பானூல்
உத்தரவேதம்
தெய்வநூல்
திருவள்ளுவர்
பொய்யாமொழி
வாயுறைவாழ்த்து
தமிழ்மறை
பொதுமறை

## உரையாசிரியர்கள்

தருமர்
மணக்குடவர்
தாமத்தர்
நச்சர்
பரிதி

பரிமேலழகர்
திருமலையர்
மல்லர்
கவிப்பெருமாள்
காளிங்கர்

# திருக்குறள்

## இரண்டாம் பாரம்

---

### அறத்துப்பால்

### I. பாயிரம்

#### *1. கடவுள் வாழ்த்து [கடவுளை வாழ்த்துதல்]

1. **தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு)**
**மனக்கவலை மாற்றல் அரிது.** **[அல்லால்**

(உரை நடை) தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

(பதவுரை) தனக்கு - (ஒருவகையாலும்) தனக்கு **உவமை இல்லாதான்** - ஒப்பு இல்லாத கடவுளுடைய, **தாள்** - திருவடிகளை, **சேர்ந்தார்க்கு அல்லால்** - சேர்ந்தவர்க்கு அல்லது, **மனக்கவலை** - மனத்தில் உண்டாகும் துன்பங்களை, **மாற்றல்**-போக்குதல், **அரிது**-உண்டாகாது.

(க-து) கடவுளுடைய திருவடிகளை வணங்குபவருக்கு எப்பொழுதும் துன்பம் உண்டாகாது.

#### * 4. அறன் வலியுறுத்தல்

[பொருளையும் இன்பத்தையும் விட அறம் வலிமை யுடையது என்பது சொல்லுதல்]

2. **அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்**
**புறத்த புகழும் இல.**

(உ-டை) அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம் புறத்த; புகழும் இல.

---

* 1, 4 முதலிய மேலரிசை எண்கள் குறள் நூலிலுள்ள அதிகாரங்களைக் குறிக்கின்றன.

(ப-ரை) அறத்தான் வருவதே - இல்லறத்தோடு பொருந்தி வாழ்வதே, இன்பம் - இன்பமாவது; மற்று எல்லாம் - அவ்வில்லறத்தோடு பொருந்தாது வருவன எல்லாம், புறத்த - (இன்பமாயினும்) துன்பத்தை யுடையன; புகழும் இல - (அதுவுமல்லாமல்) புகழும் உடையன அல்ல.

(க-து) அறம் செய்பவரே இம்மை இன்பமும் புகழும் அடைவர்.

## II. இல்லறவியல்

### 7. மக்கட் பேறு [மக்களைப் பெறுதல்]

3. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

(உ-டை) தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய் ஈன்றபொழுதின் பெரிது உவக்கும்.

(ப-ரை) தன் மகனை - தன் மகனை, சான்றோன் என - (கல்வி கேள்விகளால்) நிறைந்தவன் என்று (அறிவுடையோர்) சொல்ல, கேட்ட தாய் - கேள்விப்பட்ட தாய், ஈன்ற பொழுதின் - (தான் அவனைப்) பெற்ற காலத்தில் உண்டான மகிழ்ச்சியினும், பெரிது - மிகவும், உவக்கும் - மகிழ்வாள்.

(க-து) தன் மகனைச் சான்றோன் என்று பெரியோர் சொல்லக்கேட்ட தாய் பெற்றபொழுது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்ச்சி அடைவாள்.

### 8. அன்புடைமை

[எல்லாரிடத்தும் அன்புடையராய் இருத்தல்]

4. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்
புன்கணீர் பூசல் தரும். [வலர்

(உ-டை) அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ? ஆர்வலர் புல் கண் நீர் பூசல் தரும்.

(ப-ரை) அன்பிற்கும்-அன்பினுக்கும், அடைக்கும்-(பிறர் அறியாமல்) அடைத்துவைக்கும், தாழ் - தாழும், உண்டோ - உளதோ? (தம்மால் அன்புசெய்யப்பெற்ற வரது துன்பம் கண்டவிடத்தே) ஆர்வலர் - அன்புடையாரது, புல கண் நீர் - (பொழிகின்ற) துன்பமான கண்ணீரே, பூசல் தரும் - (உள்ளேயிருக்கின்ற அன்பினை எல்லாரும் அறிய) வெளிப்படுத்தும்.

(க-து) அன்புகொள்ளப்பட்டவரது துன்பம் கண்டவிடத்து அன்புடையவர் பொழிகின்ற கண்ணீரே உள்ளிருக்கும் அன்பைக் காட்டும்.

தாழ் - தாட்பாள்.

5. அன்பின் வழிய(து) உயிர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு.

(உ-டை) அன்பின் வழியது உயிர்நிலை; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த.

(ப-ரை) அன்பின் வழியது - அன்பு முதலாக அதன் பின் நின்ற உடம்பே, உயிர்நிலை - உயிர் நின்ற உடம்பு; அஃது இலார்க்கு - அந்த அன்பு இல்லாதவர்க்கு (உள்ள), உடம்பு - உடம்புகள், என்பு - எலும்பினை, தோல் - தோலால், போர்த்த - மூடப்பட்டன ஆகும். (உயிர் நின்ற உடம்பு ஆகா.)

(க-து) அன்பு இல்லாத உடம்பு உயிர் இல்லாத உடம்பு போன்றது என்பதாம்.

இல்லறத்திற்கு அடிப்படையாக உள்ளது அன்பாகும்.

9. விருந்தோம்பல் [விருந்தினரைப் பாதுகாத்தல்]

6. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான் இல்.

(உ-டை) முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்; செய்யா[illegible] அகன் அமர்ந்து உறையும்.

(ப-ரை) முகன் அமர்ந்து - முகம் இனியனாய், நல் விருந்து - தகுந்த விருந்தினரை, ஓம்புவான் - காப்பவனது, இல் - வீட்டில்; செய்யாள் - திருமகள், அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, உறையும் - வாழ்வாள்.

(க-து) விருந்தினரைக் காப்பவன் வீட்டில் இலக்குமி தங்கி இருப்பாள்.

தன் செல்வம் நல்வழிப்படுதலால் இலக்குமி மனம் மகிழ்வாள். விருந்தினர்க்குத் தகுதியாவது அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் சிறந்திருத்தல்.

## 10. இனியவை கூறல்

[இனிமையான சொற்களைச் சொல்லுதல்]

7. **பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு) அணியல்ல மற்றுப் பிற.**

(உ-டை) ஒருவற்கு அணி பணிவு உடையன் இன் சொலன் ஆதல்; பிற அல்ல.

(ப-ரை) ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - ஆபரண மாவது, பணிவு உடையன் - (பெரியோரிடத்து) வணக்கம் உடையவனாய், இன்சொலன் - (எல்லோரிடத்தும்) இனிய சொல்லையும் உடையவன், ஆதல் - ஆதலாகும்; பிற - (உடலுக்கு அணியும் இவை இரண்டும் அல்லாத) பிற ஆபரணங்கள், அல்ல - ஆபரணங்கள் ஆகமாட்டா. (மற்று - அசை.)

(க-து) ஒருவனுக்கு ஆபரணமாவது பணிவுடைமையும் இன்சொல்லுமேயாகும்.

'பிற' என்றது உடலில் அணியப்படும் பொன் ஆபரணங்களையும் கல்லிழைத்த ஆபரணங்களையும் குறித்தது.

### 11 செய்ந்நன்றி அறிதல்

*[தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாதிருத்தல்]*

**8. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.**

*(உ-டை)* காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.

*(ப-ரை)* காலத்தினால் - (ஒருவனுக்கு அழிவு வந்த) காலத்தில், செய்த - (ஒருவன்) செய்த, நன்றி - உபகாரம், சிறிது எனினும்-சிறியதாய் இருந்ததாயினும், ஞாலத்தின்- (காலத்தைப் பார்க்கும்போது) நில உலகத்தைக் காட்டிலும், மாண - மிகவும், பெரிது - பெரியது.

*(க-து)* ஒருவன் தக்க காலத்தில் செய்த சிறு உதவி உலகினும் மிகப் பெரியது ஆகும்.

உபகாரம் செய்யப்பட்ட காலத்தின் அருமை பெருமைகளை நோக்கி அவ்வுபகாரத்தை நன்கு மதிக்க வேண்டுமேயல்லாமல், உபகாரம் செய்யப்பட்ட பொருளினது சிறுமையை நோக்கி அவ்வுபகாரத்தை அவமதித்தல் கூடாது.

### 12. நடுவு நிலைமை

*[தருமத்தில் தவறுமல் எல்லார்க்கும் ஒப்பநிற்றல்]*

**9. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.**

*(உ-டை)* பிறவும் தமபோல் பேணி செயின் வாணிகம் செய்வார்க்கு வாணிகம்.

*(ப-ரை)* பிறவும் - பிறர் பொருளையும், தமபோல் - தம்பொருளைப்போல, பேணி - பாதுகாத்து, செயின் - வாணிகம் செய்தால், வாணிகம் செய்வார்க்கு-வியாபாரம் செய்கின்றவர்களுக்கு, வாணிகம் - நல்ல வியாபாரமாகும்.

*(க-து)* பிறர் பொருளையும் தம் பொருளைப்போலக் காத்து வியாபாரஞ் செய்தால் அது நல்ல வியாபாரமாம்.

பிறவும் தமபோற் செய்தலாவது வாங்குவது அதிகமும் கொடுப்பது குறைவும் ஆகாமல் ஒப்பநாடிச் செய்தல்.

13. அடக்கமுடைமை

[மனம், மொழி, மெய் ஆகிய இவற்றைத் தீயவழியில் செல்லாமல் அடக்கிக்கொள்ளுதல்]

**10. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து.**

(உ-டை) பணிதல் எல்லார்க்குப் நன்று ஆம்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து,

(ப-ரை) பணிதல்-அடங்கி நடத்தல், எல்லார்க்கும்-யாவர்க்கும், நன்று ஆம் நன்மையாம்; (எனினும்), அவருள்ளும் - அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்கே - பொருட் செல்வம் உடையவருக்கே, செல்வம் - (அப் பணிவு) வேறு ஒரு செல்வமாம், தகைத்து - சிறப்பினை யுடையது.

(க-து) அடக்கம் எல்லார்க்கும் சிறந்ததாயினும் செல்வமுடையவருக்கே மேலான செல்வமாம்.

14. ஒழுக்கமுடைமை

[தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட ஒழுக்கங்களை உடையராதல்]

**11. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**

(உ-டை) ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்.

(ப-ரை) ஒழுக்கம் உடைமை - (எல்லார்க்கும்) நல்லொழுக்கத்துடன் இருத்தலே, குடிமை - உயர்குடிப் பிறப்பாகும்; இழுக்கம் - (அவ்வொழுக்கத்தில்) தவறுதல், இழிந்த பிறப்பாய் விடும் - தாழ்ந்த பிறப்பாகும்.

(க-து) ஒருவனுக்கு ஒழுக்கமுடைமையே உயர்குடிப் பிறப்பாதம்; அவ்வொழுக்கம் இல்லாமையே தாழ்ந்த பிறப்பாகும்.

12. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.

(உ-டை) ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்; இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர்.

(ப-ரை) (எல்லோரும்) ஒழுக்கத்தின்-நல்லொழுக்கத்தினால், மேன்மை - மேம்பாட்டை, எய்துவர் - அடைவர்; இழுக்கத்தின் - (அவ்வொழுக்கத்தில்) தவறுதலால், எய்தா - (தாம்) அடையத் தகுதியுடையதல்லாத, பழி - பழியை, எய்துவர் - அடைவர்.

(க-து) நல்லொழுக்கம் உயர்வையும், தீயொழுக்கம் பழியையும் அடைவிக்கும்.

16. பொறையுடைமை

[பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுதல்]

13. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத் பொன்றுந் துணையும் புகழ். [தார்க்குப்

(உ-டை) ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்.

(ப-ரை) ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்குசெய்தவரைத்) தண்டித்தவர்க்கு, ஒருநாளை இன்பம்-அவ்வொரு நாளைக்குமட்டும் இன்பம் உண்டாகும்; பொறுத்தார்க்கு-அத்தீங்கு செய்தவரைப் பொறுத்தவர்க்கு, பொன்றும் துணையும் - (உலகம்) அழியுமட்டும், புகழ் - புகழ் உண்டாகும்.

(க-து) தமக்குத் தீங்குசெய்தவரைப் பொறுத்தவர்க்கு உலகம் உள்ள அளவும் புகழ் உண்டாகும்.

பொன்றுதல் - அழிதல். துணை - அளவு.

17. அழுக்காறுமை [பொருமை கொள்ளாதிருத்தல்]

**14. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.**

(உ-டை) அழுக்காறு என ஒரு பாவி திரு செற்று தீ உழி உய்த்துவிடும்.

(ப-ரை) அழுக்காறு என - பொருமை என்று சொல்லப்படுகிற, ஒரு பாவி - ஒப்பில்லாத பாவியானவன், திரு செற்று - செல்வத்தைக் கெடுத்து, தீ உழி-நரகத்தில், உய்த்துவிடும் - செலுத்திவிடும்.

(க-து) பொருமை என்னும் பாவியானவன் பொருமையுடையவனது செல்வத்தைக் கெடுத்து மறு பிறப்பில் நரகத்தில் சேர்த்துவிடுவான்.

கொடியவனைப் பாவி என்று சொல்லுதல்போல அழுக்காற்றினைப் 'பாவி' என்றார்.

18. வெஃகாமை

[பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள நினையாமை]

**15. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்(து) ஆங்கே திரு.**

(உ-டை) அறன் அறிந்து வெஃகா அறிவு உடையார் திரு திறன் அறிந்து ஆங்கே சேரும்.

(ப-ரை) அறன் அறிந்து - தருமம் என்று அறிந்து, வெஃகா-(பிறர்பொருளை) விரும்பாத, அறிவு உடையார்- அறிவு உடையாரை, திரு - இலக்குமி, திறன் அறிந்து - (தான் அடைதற்கு ஆம்) உபாயத்தை அறிந்து, ஆங்கே - அப்பொழுதே, சேரும் - சென்று அடைவாள்.

(க-து) பிறர் பொருளை விரும்பாத அறிவுடையவரை இலக்குமி சேர்வாள்.

அடைதற்கு ஆம் உபாயம்: காலம், இடம், செயல் முதலாயின.

## 19. புறங்கூறாமை

[காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசாமை]

**16. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.**

(உ-டை) நக சொல்லி நட்பு ஆடல் தேற்றாதவர் பக சொல்லி கேளிர் பிரிப்பர்.

(ப-ரை) நக சொல்லி - (கூடி) மகிழும்படி (இனிய சொற்களைச்) சொல்லி, நட்பு ஆடல் - (அயலாரோடும்) சிநேகம் செய்தலை, தேற்றாதவர் - அறியாதவர், பக சொல்லி - (தம்மைவிட்டு) நீங்கும்படி புறஞ்சொல்லி, கேளிர் - (தம்) சுற்றத்தாரையும், பிரிப்பர் - பிரியச் செய்வர்.

(க-து) மகிழும்படி சொல்லி நட்புச் செய்தலை அறியாதவர்கள் புறங்கூறிச் சுற்றத்தாரைப் பிரிப்பர்.

புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவர் என்பதாம்.

## 21. தீவினை அச்சம்

[தீய செயல்களைச் செய்வதற்குப் பயப்படுதல்]

**17. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.**

(உ-டை) இலன் என்று தீயவை செய்யற்க; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும்.

(ப-ரை) இலன் என்று - வறுமையை உடையேன் என்று நினைத்து, தீயவை-(அவ்வறுமை தீர்தற்பொருட்டு) தீவினைகளை, செய்யற்க - (ஒருவன்) செய்யாது ஒழிக; செய்யின் - செய்தால், பெயர்த்தும் - பின்னும், இலன் ஆகும் - வறுமையையுடையவன் ஆவான். [மற்று - அசைநிலை]

(க-து) வறுமையாலே தீவினை செய்யலாகாது; செய்தால் மீண்டும் வறுமையை உடையவனாவான்.

'மற்றும்' என்ற சொல்லிலுள்ள உம் என்பதைப் பெயர்த்து என்பதனோடு சேர்த்துப் பொருள்கொள்க.

22. ஒப்புரவு அறிதல் [உலக நடையை அறிந்துசெய்தல்]

18. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

(உ-டை) செல்வம் நயன் உடையான்கண் படின், பயன் மரம் உள்ளூர் பழுத்து அற்று.

(ப-ரை) செல்வம் - செல்வமானது, நயன் உடையான் கண் - உதவிசெய்பவனிடத்தே, படின் - உண்டானால், (அது) பயன் மரம் - பயன்படும மரம், உள் ஊர் - ஊர் நடுவே, பழுத்து அற்று - பழுத்தாற்போலும் (ஆல்-அசை).

(க-து) உபகாரம் செய்பவனிடத்தில் செல்வம் உண்டானால் அது நடுவூரில் பயன்படும் மரம் பழுத்ததற்கு ஒப்பாகும்.

நயன் – ஒப்புரவு; உபகாரம் செய்தல்.

23. ஈகை [ஏழைகட்கு இல்லையென்னாமல் கொடுத்தல்]

19 ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
வைத்திழக்கும் வன்க ணவர். [தாமுடைமை

(உ-டை) தாம் உடைமை வைத்து இழக்கும் வன் கணவர் ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல்.

(ப-ரை) தாம்-தாம், உடைமை-உடைய பொருளை, வைத்து - (கொடுக்காது) வைத்து, இழக்கும் - (பின்) இழந்துபோம்; வன் கணவர் - அருளிலாதவர், ஈத்து - (ஏழைகட்கு வேண்டிய பொருளைக்) கொடுத்து, உவக்கும் - (அவர்) மகிழ்தலினால் (அருளுடையார்) அடையும், இன்பம் - இன்பத்தை, அறியார்கொல் - கண்டு அறியாரோ ?

(க-து) பொருளைத் தேடி வைத்து இழப்பவர், கொடுத்து மகிழும் இன்பத்தை அறியார்.

### 24. புகழ் [கீர்த்தி]

20. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.

(உ-டை) ஈதல், இசைபட வாழ்தல்; அதுவல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை.

(ப-ரை) ஈதல் - (வறியவர்களுக்குக்) கொடுக்க, இசைபட - (அதனால்) புகழ் உண்டாக, வாழ்தல்-வாழ்க; அது அல்லது - அப்புகழ் அல்லாது, உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம்-பயன், இல்லை-வேறு இல்லை (ஆதலால்).

(க-து) ஏழைகட்குக் கொடுத்துப் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழையல்லாமல் மக்கள் உயிர்க்கு வேறு இலாபமில்லை.

புகழ் உண்டாக வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை முதலியன இருந்தாலும் ஈகையே சிறந்ததாகும்.

## III. துறவறவியல்

### 28. கூடாவொழுக்கம்

[துறவிகள் காம இன்பத்தை விரும்பியொழுகும் தகாத ஒழுக்கம்]

21. வானுயர் தோற்றம் எவன்செய்யும் [தன்னெஞ்சம்
தானறி குற்றம் படின்.

(உ-டை) தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின், வான் உயர் தோற்றம் எவன் செய்யும்?

(ப-ரை) தான் அறி - தான் அறிந்த, குற்றம் - குற்றத்திலே, தன் நெஞ்சம் - தன் மனம், படின் - தாழுமாயின், வான் உயர் - (ஒருவனுக்கு) ஆகாயம்போல் உயர்ந்த, தோற்றம் - தவ வேடம், எவன் செய்யும் - என்ன பயனைச் செய்யும்?

(க-து) மனமறிந்து குற்றம் செய்பவனுடைய தவ வேடத்தால் பயனில்லை.

29. கள்ளாமை

[பிறரை வஞ்சித்து அவர் பொருளைக் கவர நினையாமை]

**22. உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.**

(உ-டை) பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல், உள்ளத்தால் உள்ளலும் தீது.

(ப-ரை) பிறன் பொருளை - பிறனுடைய பொருளை, கள்ளத்தால் - (அவன்) அறியாவகையால், கள்வேம் - வஞ்சித்துக் கவர்ந்துகொள்வோம், எனல் - என்பதை, உள்ளத்தால் - மனத்தால், உள்ளலும் - நினைத்தலும், தீது - பாவம் தருவது. (ஏ - அசை)

(க-து) பிறனொருவனுடைய பொருளைக் கவர நினைத்தலும் பாவமாம்.

30. வாய்மை [உண்மை பேசுதல்]

**23. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.**

(உ-டை) சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல; பொய்யா விளக்கே விளக்கு.

(ப-ரை) சான்றோர்க்கு - (துறவினாலே) நிறைந்தோருக்கு, எல்லா விளக்கும் - (வெளி இருளைப் போக்குகின்ற உலகத்தோரது) விளக்குகளெல்லாம், விளக்கு அல்ல - விளக்குகள் அல்ல; பொய்யா விளக்கே - (அகத்திருளைப் போக்குகிற) பொய்யாமையாகிய விளக்கே, விளக்கு - விளக்காம்.

(க-து) பெரியோர்க்குப் பொய் சொல்லாமையே விளக்காகும்.

உலகத்தார் விளக்குகள் - சூரியன், சந்திரன், நெருப்பு என்பன. அகத்து இருள் - அறியாமை.

31. வெகுளாமை [கோபம் கொள்ளாதிருத்தல்]

**24. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்தல் அதனுல் வரும்.**

(உ-டை) யார் மாட்டும் வெகுளியை மறத்தல்; தீய பிறத்தல் அதனுல் வரும்.

(ப-ரை) யார் மாட்டும் - எவரிடத்தும், வெகுளியை - கோபம் செய்தலை, மறத்தல் - நினையாது ஒழிக; (ஏனெனில்) தீய பிறத்தல் - தீமைகள் (எல்லாம்) உண்டாதல், அதனுல் வரும் - அக் கோபத்தால வரும்.

(க-து) தீமைகள் எல்லாம் கோபத்தால் உண்டாதலால் கோபங்கொள்ளக்கூடாது.

யார் மாட்டும் - வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவரிடத்தும.

32. இன்னு செய்யாமை

[எக்காரணம்பற்றியும் ஓர் உயிர்க்கும் துன்பம் செய்யாது இருத்தல்]

**25. பிறர்க்(கு) இன்னு முற்பகல் செய்யின் தமக்(கு)**
**பிற்பகல் தாமே வரும்.** [இன்னு

(உ-டை) பிறர்க்கு இன்னு முன்பகல் செய்யின் தமக்கு இன்னு பின்பகல் தாமே வரும்.

(ப-ரை) பிறர்க்கு - பிறருக்கு, இன்னு - துன்பம் தருகின்றவற்றை, முன்பகல் - முன்பகலிலே, செய்யின் - செய்தால், தமக்கு - தமக்கு, இன்னு - துன்பங்கள், பின்பகல் - பிற்பகலில், தாமே வரும் - (அவர் செய்யாமல்) தாமாகவே வரும்.

(க-து) முற்பகல் ஒருவனுக்குத் தீமை செய்தால் பிற்பகல் அத்தீமை தன்னையே வந்தடையும்.

பகல் முன் என்றது முற்பகல் என்றும், பகல்பின் என்றது பிற்பகல் என்றும் வந்தன. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற ஔவை வாக்கை அறிக.

# 2. பொருட்பால்

## I. அரசியல்

### 39. இறைமாட்சி [அரசனது நற்குண நற்செய்கைகள்]

**26. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு**

(உ-டை) வேந்தற்கு இயல்பு அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை

(ப-ரை) வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - மனஉறுதியும், ஈகை - கொடையும், அறிவு - அறிவும், ஊக்கம் - மனவெழுச்சியும் இநான்கும் - இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - இடைவிடாது நற்றல.

(க-து) அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இந்நான்கு குணங்களும் அரசனுக்கு இயல்பாகும்.

### 40. கல்வி [கற்றற்குரிய நூல்களைக் கற்றல்]

**27. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.**

(உ-டை) கற்றோர் கண்ணுடையர் என்பவர்; கல்லாதவர் முகத்து இரண்டு புண்ணுடையர்

(ப-ரை) கற்றோர் - படித்தவரே, கண்ணுடையர் - கண்களை உடையவர், என்பவர் - என்று சிறப்பித்துச் சொல்லப்படுவர் ஆவர்; கல்லாதவர் - படியாதவர், முகத்து - முகத்தினில், இரண்டு - இரண்டு, புண்ணுடையர் - புண்களையுடையவர். (கண் இல்லாதவரேயாவர்.)

(க-து) கற்றவர் முகத்தில் உள்ளது கண்; கல்லாதவர் முகத்தில் உள்ளது புண்.

எல்லா இடத்துப் பொருள்களையும், எல்லாக் காலத்திலுள்ள பொருள்களையும் காணும் ஞானக்கண் உடைமையால் கற்றாரைக் 'கண்ணுடையர்' என்றும், நோய் முதலியவற்றால் துன்பம் செய்யும் ஊனக்கண் (முகத்திலுள்ள மாமிசக் கண்) உடைமையால் கல்லாதாரைப் 'புண்ணுடையர்' என்றும் சொன்னார்.

TR 031,105(1) N48



86703

28. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

(உ-டை) மணற் கேணி தொட்ட அனைத்து ஊறும்; மாந்தர்க்கு அறிவு கற்ற அனைத்து ஊறும்.

(ப-ரை) மணல் கேணி - மணலினிடத்துக் கேணி, தொட்ட அனைத்து - தோண்டிய அளவினதாக, ஊறும் - தண்ணீர் ஊறும். (அதுபோல)· மாந்தர்க்கு - மக்களுக்கு, அறிவு - அறிவு, கற்ற அனைத்து - கற்ற அளவினதாக, ஊறும் - பெருகும்.

(க-து) தோண்டிய அளவுக்கேற்ப மணலில் நீர் சுரப்பதுபோல, படித்த அளவுக்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும்.

இங்கே 'கேணி' என்பது அதனிடத்திலுள்ள நீருக்கு இடவாகுபெயர். 'தாம் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என்பதையும் நோக்குக.

41. கல்லாமை [படிப்பதற்குரிய நூல்களைப் படியாமை]

29. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(உ-டை) நிரம்பிய நூல் இன்றி கோட்டி கொளல், அரங்கு இன்றி வட்டு ஆடி அற்று.

(ப-ரை) நிரம்பிய - (தான்) நிரம்புதற்குக் காரணமாகிய, நூல் - நூல்களை, இன்றி - இல்லாமல், கோட்டி கொளல் - (ஒருவன்) சபையினிடத்து ஒன்றைச் சொல்லுதல், அரங்கு - வகுப்பு இடத்தை, இன்றி - இல்லாமல், வட்டு ஆடி அற்று - உண்டை உருட்டியது போலும்.

(க-து) ஒருவன் கல்வியைக் கற்காமல் சபையில் ஒன்றைச் சொல்லுதல் வகுப்பறையில்லாமல் சூதாடியது போலும்.

அரங்கு - உருட்டிய காய் சென்று நிற்பதற்குக் குறிக்கப்பட்ட இடம். வட்டாடல் - உண்டையுருட்டல். கோட்டி - சபை; இது அங்கு சொல்லப்படும் சொல்லை உணர்த்திற்று.

42. கேள்வி [கேட்டு அறியவேண்டியவைகளைக் கற்றவரிடம் கேட்டல்]

**30. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.**

(உ-டை) எனைத்து ஆனும் நல்லவை கேட்க; அனைத்து ஆனும் ஆன்ற பெருமை தரும்.

(ப-ரை) எனைத்து ஆனும் - (ஒருவன்) மிகச் சிறிதளவாயினும், நல்லவை - நன்மை தரும் பொருள்களை, கேட்க - கேட்பானாக; (அக்கேள்வி) அனைத்து ஆனும் - அவ்வளவு ஆனாலும், ஆன்ற - நிறைந்த, பெருமை தரும் - பெருமையைத் தரும்.

(க-து) ஒருவன் நல்லவைகளைக் கேட்டால் அவை மிக்க பெருமையைக் கொடுக்கும்.

மழை நீர்த்துளி சிறிது சிறிதாகச் சேர்ந்து பெரு வெள்ளமாய்ப் பயன் தருதல்போல, இக்கேள்வியும் சிறிது சிறிதாகச் சேர்ந்து எல்லா அறிவுகளையும் உண்டாக்கும்.

43. அறிவுடைமை [பகுத்தறிவு உடையராய் இருத்தல்]

**31. அறிவுடையார் ஆவ(து) அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.**

(உ-டை) ஆவது அறிவார் அறிவுடையார்; அஃது அறிகல்லாதவர் அறிவிலார்.

(ப-ரை) ஆவது - வரக்கடவதை, அறிவார் - முன்னே அறியவல்லவர், அறிவுடையார் - அறிவை உடையவர் ஆவார்; அஃது - அவ்வரக்கடவதை, அறிகல்லாதவர் - (முன்னே) அறியமாட்டாதவர், அறிவிலார் - அறிவில்லாதவராவர்.

(க-து) பின்வரக்கடவதை முன் அறியவல்லவர் அறிவு உடையராவர்; அறியமாட்டாதவர் அறிவில்லாதவராவர்.

44. குற்றங் கடிதல் [குற்றங்களைப் போக்குதல்]

**32. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு.**

(உ-டை) தன் குற்றம் நீக்கி பிறர் குற்றங் காண்கிற்பின், இறைக்கு ஆகும் குற்றம் என்?

(ப-ரை) தன்குற்றம் - தனது குற்றத்தை, நீக்கி - (முன்னே கண்டு) போக்கி, பிறர் குற்றம் - பிறரது குற்றத்தை, காண்கிற்பின் - (பின்னே) காணவல்லவனாயின், இறைக்கு-அரசனுக்கு, ஆகும்-வரக்கூடியதான, குற்றம்-குற்றம், என்-யாது?

(க-து) அரசன் தன் குற்றத்தை முன்னர்ப் போக்கிப் பின்னர் பிறர் குற்றத்தைப் போக்குவானாகில் அவனுக்குக் குற்றமில்லையாம்.

45. பெரியாரைத் துணைக்கோடல்

[பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல்]

**33. தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.**

(உ-டை) தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை.

(ப-ரை) தம்மின்-தம்மைக் காட்டிலும், பெரியார்-(அறிவு முதலியவற்றால்) மேம்பட்டவர், தமர் ஆ - தமக்குச் சிறந்த துணைவர் ஆகும்படி, ஒழுகுதல் - (தாம் அவர் வழியிலே நின்று) நடத்தல், வன்மையுள் எல்லாம் - (அரசனுக்கு) வலியுடைமை எல்லாவற்றிலும், தலை - மேலானது.

(க-து) அரசன் தம்மினும் பெரியவர் கூறும் முறையில் நடத்தல் வலிமையுள் எல்லாம் சிறந்ததாகும்.

46. சிற்றினம் சேராமை

[இழிந்தவர் கூட்டத்திற் சேராதிருத்தல்]

**34. மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்**
**இன்னான் எனப்படுஞ் சொல்.**

(உ-டை) மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம்; இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம்.

(ப-ரை) மாந்தர்க்கு-மனிதர்க்கு, உணர்ச்சி-பொது அறிவானது, மனத்தான்-(தம்) மனத்தினாலே, ஆம்-உண்டாகும்; இன்னான் எனப்படும் - இவன் இப்படிப்பட்டவனென்று (உலகத்தாலே) சொலப்படுகிற, சொல்-சொல்லானது, இனத்தான்-இனத்தினாலே, ஆம்-உண்டாகும்.

(க-து) மனிதர்க்கு அறிவு மனத்தினலே உண்டாகும்; ஒருவன் சேர்ந்த இனத்தினலே இன்ன தன்மையன் என்று எண்ணப்படுவான்.

ஒருவன் நல்லவன் என்பதையும், தீயவன் என்பதையும் அவன் சேர்ந்திருக்கின்ற இனத்தினல் அறிந்து கொள்ளலாம்.

48. வலியறிதல்

[அரசன் வினைவலிமை, தன்வலிமை, பகைவன் வலிமை, துணைவலிமை ஆகிய நால்வகை வலிமையையும் அறிதல்]

35. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

(உ-டை) பீலிபெய் சாகாடும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் அச்சிறும்.

(ப-ரை) பீலிபெய்-மயில் இறகு ஏற்றிய, சாகாடும்-வண்டியும், அப்பண்டம்-அம்மயில் இறகை, சாலமிகுத்து-(அது சுமக்கும் அளவினல்லாமல்) மிகுதியாக, பெயின்-ஏற்றினல், அச்சு இறும்-அச்சு முறியும்.

(க-து) மயில்தோகை ஏற்றிய வண்டியும் அளவுக்கு மீறி அத்தோகையை ஏற்றினல் அச்சு ஒடியும்.

எளியரென்று பலரோடும் பகைகொள்ளும் அரசன் தான் வலியனயிருந்தாலும், அவர்கள் ஒருங்கு சேர்ந்தவிடத்து வலிமை இழப்பான் என்னுங் கருத்தை உணர்த்துகின்றது.

49. காலமறிதல்

[அரசன் பகைவர்மேல் செல்லுதற்கு ஏற்ற காலத்தினை அறிதல்]

36. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(உ-டை) கூம்பும் பருவத்து கொக்கு ஒக்க; மற்று சீர்த்தவிடத்து அதன் குத்து ஒக்க.

(ப-ரை) கூம்பும் பருவத்து-போர்த்தொழிலின்மேற் செல்லாது இருக்குங்காலத்து, கொக்கு ஒக்க - கொக்கு இருக்குமாறு போல இருக்க; மற்று சீர்த்த இடத்து - மற்றைப் (போர்மேல்) செல்லுங்காலங்கிடைத்தபொழுது, அதன் குத்துஒக்க-அது தவருமல் விரைவில் தத்துவதைப் போல் செய்து முடிக்க.

(க-து) காலம் வருமளவும் கொக்கைப்போல் அடங்கியிருந்து காலம் வாய்த்தபொழுது கொக்கு விரைந்து மீனைக் குத்துதல்போல் விரைந்து வெல்லுதல்வேண்டும்.

“மடைத்தலையில், ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும், வாடி யிருக்குமாங் கொக்கு” என்ற ஔவையார் வாக்கை நோக்குக.

## 50. இடனறிதல்

[பகைவன்மேற் செல்லும் அரசன் தான் வெல்வதற்கு ஏற்ற இடத்தை அறிதல்.]

**37. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.**

(உ-டை) முதலை நெடும்புனலுள் வெல்லும்; புனலின் நீங்கின் அதனைப் பிற அடும்.

(ப-ரை) முதலை - முதலையானது, நெடும்புனலுள் - ஆழமுள்ள நீரிலானல், (பிற) வெல்லும்- (பிற உயிர்களையெல்லாம்) வென்றுவிடும்; புனலின் - அந்நீரினின்றும், நீங்கின் - நீங்கினல், அதனை-அம்முதலையை, பிற-பிற உயிர்களெல்லாம், அடும்-வெல்லும்.

(க-து) முதலை நீரிலிருந்தால் எல்லா உயிரையும் வெல்லும்; அது அந்நீரைவிட்டுத் தரையிலிருந்தால் பிற உயிர்கள் வெல்லும்.

எல்லாரும் தமது இடத்திலே வலியராயிருப்பரென்பது சொல்லப்பட்டது. பகைமேற் செல்லும் அரசன் பகைவர் நிற்கமாட்டாத இடமறிந்து சென்ருல் அப்பகைவர் அவனுக்கு எளியவராவார். தான் நிற்கமாட்டாத இடத்தே சென்ருல் அப்பகைவருக்கு அவன் எளியவனுவான் என்னும் பொருளை இக்குறள் உணர்த்துகின்றது.

51. தெரிந்து தெளிதல் [ஒருவரை ஆராய்ந்து நம்புதல்]

**38. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

(உ-டை) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக்கல் தம்தம் கருமம் ஏ.

(ப-ரை) பெருமைக்கும் - (ஒருவருடைய) உயர்வுக்கும், ஏனை-அதற்கு வேறாகிய, சிறுமைக்கும்-தாழ்வுக்கும், கட்டளைக்கல் - உரைகல்லாவது, தம்தம் - அவரவர்கள் செய்கின்ற, கருமம்ஏ - செயலேயாம்.

(க-து) ஒருவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பதை அவரவர் செய்கையால் அறியலாம்.

கட்டளைக்கல் – பொன்னின் மாற்றை அறிவதற்குத் தட்டார் வைத்திருக்கும் கருவியாகிய உரைகல்.

53. சுற்றந்தழால்

[உறவினரைச் சேர்த்துக்கொள்ளுதல்]

**39 பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத் தில்.**

(உ-டை) பெருங்கொடையான் வெகுளி பேணான் அவனின் மருங்குடையார் மாநிலத்து இல்.

(ப-ரை) பெருங்கொடையான்-மிகுந்த கொடையை யுடையவனும், வெகுளி-கோபத்தை, பேணான்-விரும்பா தவனும் (ஆனால்), அவனின்-அவன்போல, மருங்கு உடையார்-சுற்றம் உடையவர், மாநிலத்து-இப்பெரிய உலகத்தில், இல்-இல்லை.

(க-து) மிகுந்த கொடையும் கோபமில்லாமையும் உடையவனாகில் அவனைப்போல் சுற்றம் உடையவர் இல்லை.

54. பொச்சாவாமை

[செய்யவேண்டிய காரியத்தில் மறதி இல்லாமை]

**40. அரியவென்(று) ஆகாத இல்லை பொச்சாவாக்**
**கருவியான் போற்றிச் செயின்.**

(உ-டை) பொச்சாவாக் கருவியான் போற்றிச் செயின், அரிய என்று ஆகாத இல்லை.

(ப-ரை) பொச்சாவா-மறவாத, கருவியான் - மனத்தால், போற்றி-எண்ணி, செயின்-செய்தால், அரிய என்று - (இவை செய்தற்கு) அருமையானவை என்று சொல்லப்பட்டு, ஆகாத - (ஒருவனுக்கு) முடியாத காரியங்கள், இல்லை - இல்லையாம்.

(க-து) இடைவிடாத நினைவும், தவறாத சூழ்ச்சியும் உடையவர்க்கு எல்லாம் எளிதில் முடியும்.

55. செங்கோன்மை

[அரசனால் செய்யப்படும் நீதியின் தன்மை]

41. **வேலன்று வென்றி தருவது மன்னவன்**
**கோலதூஉங் கோடா(து) எனின்.**

(உ-டை) மன்னவன் வென்றி தருவது வேல் அன்று; கோல்; அதூஉம் கோடாது எனின்.

(ப-ரை) மன்னவன் - அரசனுக்கு, வென்றி தருவது - வெற்றியைத் தருவது வேல், அன்று - (அவன் எறியும்) வேலாயுதம் அல்ல; கோல் - (வெற்றியைத் தருவது) செங்கோலாம்; அதூஉம் - அச்செங்கோலும் (அப்படிப்பட்டதாவது), கோடாது எனின் - (தான்) கோணாது இருக்குமாயின்.

(க-து) அரசனுக்கு வெற்றியைத் தருவது வேலன்று; நீதி தவறாத செங்கோலே வெற்றியைத் தரும்.

56. கொடுங்கோன்மை

[அரசு முறையிலிருந்து கோணுதல் தன்மை]

42. **துளியின்மை ஞாலத்திற்(கு) எற்றற்றே வேந்தன்**
**அளியின்மை வாழும் உயிர்க்கு.**

(உ-டை) வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு, துளி இன்மை ஞாலத்திற்கு எற்று அற்று ஏ.

(ப-ரை) வேந்தன்-அரசனது, அளியின்மை-அருளில்லாமையானது, வாழும் - (அவன் நாட்டிலே) வாழுகிற, உயிர்க்கு - குடிகளுக்கு, துளி - மழையினது, இன்மை - இல்லாமையானது, ஞாலத்திற்கு - பூமியில் வாழும் உயிர்களுக்கு, எற்று - எவ்வகைத் துன்பம் தருமோ, அற்று - அவ்வகைத் துன்பம் தரும். [ஏ - தேற்றம்]

(க-து) மழையில்லாமை உயிர்களுக்குத் துன்பம் தருதல்போல, அரசன் அருள் இல்லாதிருத்தல் குடிகளுக்குத் துன்பம் தரும்.

'துளி' என்பது இங்கு மழையை உணர்த்திற்று. 'உயிர்' என்பது குடிகள்மேல் நின்றது.

60. ஊக்கமுடைமை

[மனம் தளர்வின்றிக் கிளர்ச்சி உறுதல்]

43. உள்ளம் உடைமை உடைமை; பொருள்
நில்லாது நீங்கி விடும். [உடைமை

(உ-டை) உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும்.

(ப-ரை) உள்ளம் உடைமை - ஊக்கம் உடைமையே, உடைமை - (ஒருவனுக்கு நிலைநின்ற) செல்வம்; பொருள் உடைமை - (மற்றைச்) செல்வம் உடைமை, நில்லாது - நிலை நில்லாது, நீங்கிவிடும் - நீங்கிப்போகும்.

(க-து) ஒருவனுக்கு ஊக்கமே நிலையுள்ள பொருளாம்; ஏனைய செல்வங்கள் அழியும் தன்மையுடையவை.

61. மடியின்மை [சோம்பல் இல்லாமை]

44. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும்.

(உ-டை) மடிமை குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்தி விடும்.

(ப-ரை) மடிமை - சோம்பல் தன்மையானது, குடிமைக்கண் - குடிமையையுடைய அரசனிடத்தே, தங்கின் - தங்குமாயின், (அது) தன் ஒன்னார்க்கு - தன் பகைவர்க்கு, அடிமை - அடியனாந்தன்மையை, புகுத்திவிடும் - (அவனிடம்) சேர்த்துவிடும்.

(க-து) சோம்பல் அரசனிடத்து இருக்குமானால் அவன் பகைவர்க்கு அடிமையாவான்.

குடிமை - குடிவாழ்க்கையை விருத்திபண்ணுதல்.

## 62. ஆள்வினையுடைமை

[விடாமுயற்சியை உடையவன் ஆதல்]

45. **அருமை உடைத்தென்(று) அசாவாமை**
**பெருமை முயற்சி தரும்.** [வேண்டும்

(உ-டை) அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்.

(ப-ரை) அருமை உடைத்து - (நாம் இத்தொழிலை முடித்தல்) அருமையை உடையது, என்று - என்று நினைத்து, அசாவாமை வேண்டும் - தளராதிருக்கவேண்டும்; பெருமை - (அத்தொழிலை முடித்தற்கு ஏற்ற) பெருமையை, முயற்சி - முயற்சியானது, தரும் - உண்டாக்கும்.

(க-து) ஒரு தொழிலைச் செய்தல் அருமையுடையதென்று மனந்தளராது விடாது முயன்றால் அத்தொழில் எளிதில் முடியும்.

## 63. இடுக்கண் அழியாமை

[துன்பம் வந்தவிடத்து மனங்கலங்காமை]

46. **இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான்**
**துன்பம் உறுதல் இலன்.**

(உ-டை) இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் துன்பம் உறுதல் இலன்.

(ப-ரை) (இன்பம் - தன் உடம்பிற்கு) இன்பமாயவற்றை, விழையான் - விரும்பாமல், இடும்பை - துன்பம் அடைதல், இயல்பு என்பான் - இயற்கை என்று தெளிந்திருப்பவன், துன்பம் - (தன் முயற்சியால்) துன்பம், உறுதல் இலன் - அடைதல் இல்லை.

(க-து) இன்பத்தை விரும்பாமலும், விதியால் வந்த துன்பத்தைத் தடுக்க எண்ணாமலும் இருப்பவன் துன்பம் அடையான்.

II. அங்கவியல்

64. அமைச்சு [மந்திரியின் குணஞ் செயல்கள்]

**47. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)**
**ஐந்துடன் மாண்ட தமைச்சு.**

(உ-டை) வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள் வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு.

(ப-ரை) வன்கண் - (தொழில் செய்தலில்) அசைவில்லாமையும், குடிகாத்தல் - குடிகளைக் காத்தலும், கற்றறிதல் - (நீதி நூல்களைக்) கற்று (செய்வன தவிர்வன) அறிதலும், ஆள்வினையோடு - முயற்சியும், ஐந்துடன் - (முன் சொல்லப்பட்ட) அங்கங்களைந்துடனே, மாண்டது - திருந்த உடையவனே, அமைச்சு - மந்திரியாவான்.

(க-து) அசைவில்லாமையும், குடிகளைக் காத்தலும், கற்றறிதலும், முயற்சியும் உடையவனே மந்திரி.

முன் சொல்லப்பட்ட ஐந்து அங்கங்கள் :—சேனை, பொருள், காலம், செய்கை, தொழில் என்பன. அசைவின்மை - தளராமை; உறுதியாய் நிற்றல்.

66. வினைத்தூய்மை

[செய்யுந் தொழில் தூயதாயிருத்தல்]

**48. பழிமலைந்(து) எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.**

(உ-டை) பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழி நல்குரவே தலை.

(ப-ரை) பழிமலைந்து - பழியைத் தம்மேற்கொண்டு, எய்திய - பெற்ற, ஆக்கத்தின் - செல்வத்தைக்காட்டிலும், சான்றோர் - உயர்ந்தோர் அனுபவிக்கும், கழிநல்குரவே - மிக்க வறுமையே, தலை - உயர்ந்தது.

(க-து) பழியாலடைந்த செல்வத்தினும் உயர்ந்தோர் அனுபவிக்கும் வறுமையே மிகச் சிறந்தது.

## 67. வினைத்திட்பம்

[நல்ல செய்கைகளைச் செய்துமுடித்தற்குரிய மனவலிமை]

**49.** எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(உ-டை) எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்துப.

(ப-ரை) எண்ணியார் - எண்ணியவர், திண்ணியர் ஆக - வலிமையுடையவராக, பெறின் -(இருக்கப்) பெற்றால், எண்ணிய - (தம்மால்) எண்ணப்பட்ட பொருள்களை யெல்லாம், எண்ணியாங்கு - அவ்வெண்ணியபடியே, எய்துப - அடைவார்.

(க-து) எண்ணியவர் தொழில் செய்தலால் வலிமை யுடையவராக இருந்தால் நினைத்த பொருளை நினைத்த படியே அடைவார்.

## 68. வினைசெயல் வகை

[மனவுறுதியுடையவர்கள் செயல்களைச் செய்யுந்திறம்]

**50.** சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது

(உ-டை) சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

(ப-ரை) சூழ்ச்சி - ஆலோசனைக்கு, முடிவு - எல்லையாவது, துணிவு எய்தல் - (ஆலோசிப்பவன் இனி இது தப்பாதென்னும்) துணிவைப் பெறுதல்; அத்துணிவு - அவ்வாறு துணிவுபெற்ற தொழில், தாழ்ச்சியுள்-(பின்) கால தாமதத்தில், தங்குதல்-தங்குதல், தீது-குற்றமுடையதாம்.

(க-து) ஆலோசனைக்கு எல்லையாவது துணிவைப் பெறுதல் ;அவ்வாறு துணிந்ததொழிலைத் தாமமின்றி விரைந்து செய்யவேண்டும்.

இரண்டாவதாக உள்ள துணிவு என்பது துணிவு பெற்ற தொழிலை உணர்த்திற்று.

## 71. குறிப்பறிதல்

[பிறர் எண்ணத்தை அவர் கூறுமுன்னமே குறிப்பினால் அறிதல்]

51. **அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.**

(உ-டை) அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்.

(ப-ரை) அடுத்தது - (தன்னைச்) சேர்ந்திருக்கின்ற பொருளின்வடிவத்தை, காட்டும்-(தன்னிடத்தில்) காட்டுகின்ற, பளிங்குபோல் - கண்ணாடிபோல, நெஞ்சம் - (ஒருவன்) மனத்தில், கடுத்தது - மிகுந்துள்ள குணத்தை, முகம் - முகமானது, காட்டும் - நன்கு காட்டும்.

(க-து) அகத்தில் உள்ள குணங்களை முகம் வெளிப்படுத்தும்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது பழமொழி.

## 74. நாடு [நாட்டின் அமைப்பு]

52. **தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.**

(உ-டை) தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இலா செல்வரும் சேர்வது நாடு.

(ப-ரை) தள்ளா - குறையாத, விளையுளும் - பயிர் விளைச்சலை உண்டுபண்ணுகின்ற உழவரும், தக்காரும் - தருமவழியில் நடப்பவரும், தாழ்வு இலா - குறைவு இல்லாத, செல்வரும் - செல்வமுடையோரும், சேர்வது - கூடி வாழ்வதே, நாடு - சிறந்த நாடாகும்.

(க-து) உழவரும், அறிவோரும், செல்வரும் கூடி வாழ்வதே சிறந்த நாடாகும்.

விளையுள் என்றது விளைச்சலை உண்டுபண்ணுகின்ற உழவரை உணர்த்திற்று.

### 79. நட்பு [சிநேகம்]

53. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

(உ-டை) நீரவர் கேண்மை பிறை நிறை நீர; பேதையார் நட்பு மதி பின் நீர.

(ப-ரை) நீரவர் - அறிவுடையவரது, கேண்மை - நட்புகள், பிறை - பிறைச்சந்திரன்போல், நிறை நீர - (நாள்தோறும்) நிறையுந்தன்மையினதாம்; பேதையார் - அறிவில்லாதவரது, நட்பு - நட்புகள், மதி - (நிறைந்த) சந்திரன்போல், பின் நீர - பின்னே நாள்தோறும் குறையுந் தன்மையனவாம்.

(க-து) அறிவுடையார் நட்பு இளம்பிறைபோல் வளரும்; அறிவில்லார் நட்பு நிறைமதிபோல் குறையும்.

அறிவுடையவர் தங்களிலே செய்த நட்பு முன்சுருங்கிப் பின் பெருகுதற்கும், அறிவில்லாதவர் தங்களிலே செய்த நட்பு முன்பெருகிப் பின் சுருங்குதற்குங் காரணம், தம்முள் முன்னறியாமையும் பின்னறிதலுமாம்.

### 80. நட்பாராய்தல்

[சிநேகமாக்கிக்கொள்ளத்தக்கவர்களை ஆராயுந் திறம்]

54. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

(உ-டை) மாசு அற்றார் கேண்மை மருவுக; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக.

(ப-ரை) மாசு அற்றார் - (உலகத்தவரோடு ஒத்துக்) குற்றமற்றவரது, கேண்மை - நட்பையே, மருவுக-பயில்க; ஒப்பு இலார் - (உலகத்தவரோடு) ஒத்தலில்லாதவரது, நட்பு - நட்பை, (ஆராயாதுகொண்டால்) ஒன்று - (அவருக்கு வேண்டிய) ஒன்றை, ஈத்தும் - கொடுத்தாயினும், ஒருவுக - விடுக.

(க-து) குற்றமில்லாதவர் நட்பைக் கொள்ளுக; ஒப்பில்லாதவர் நட்பைத் தள்ளுக.

## III. ஒழிபியல்

### 96. குடிமை [உயர்குடிப்பிறந்தாரது இயல்பு]

**55. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்.**

(உ-டை) குடிப்பிறந்தார் அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்தல் இலர்.

(ப-ரை) குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியிலே பிறந்தவர்கள், அடுக்கிய - பலவரிசை அடுக்கிய, கோடி - கோடிக் கணக்கான பொருளை, பெறினும் - பெற்றாலும், குன்றுவ - (தம் ஒழுக்கம்) குறையும் செயல்களை, செய்தல் இலர் - செய்யமாட்டார்.

(க-து) உயர்குடிப்பிறந்தவர்கள் பெரும்பொருள்களைப் பெற்றாலும் தம் ஒழுக்கத்தில் குறையமாட்டார்.

### 97. மானம்

[தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வுவரின் உயிர்வாழாமையுஞ் செய்தற்கு ஏதுவாய குணம்]

**56. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

(உ-டை) மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், மானம் வரின் உயிர் நீப்பர்.

(ப-ரை) மயிர் நீப்பின் - (தன் மயிர்த்திரளின்) ஒரு மயிர் நீங்கினாலும், வாழா - உயிர்வாழாத, கவரிமா - கவரிமானை, அன்னார் - ஒத்தவர், மானம் வரின் - தம் மானம் அழியவந்தால், உயிர் நீப்பர் - உயிரை விட்டுவிடுவர்.

(க-து) சான்றோர் தம் உயிரினும் மானத்தையே பெரிதாகக் கருதுவர்.

கவரிமா - ஒருவகைச் சாதிமான்.

### 98. பெருமை [பெரியாரது தன்மை]

**57. மேலிருந்தும் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.**

(உ-டை) மேலல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழல்லார்.

(ப-ரை) மேல் அல்லார்-சிறியோர், மேல் இருந்தும்-உயர்ந்த ஆசனங்களின்மேல் இருந்தாராயினும், மேல் அல்லர் - பெரியோராகார்; கீழ் அல்லவர் - பெரியோர், கீழ் இருந்தும் - தாழ்ந்த இடத்தில் இருந்தாராயினும், கீழ் அல்லார் சிறியோராகார்.

(க-து) ஒருவர்க்கும் பெருமையும் சிறுமையும் செல்வத்தாலும் வறுமையாலும் வாரா; அவை செயற்கரியவற்றைச் செய்வதாலும் செய்யாமையாலும் வரும்.

99. சான்றாண்மை

[பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை]

58. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண். [யோ(டு)

(உ-டை) அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு சால்பு ஊன்றிய தூண் ஐந்து.

(ப-ரை) அன்பு - (எல்லோரிடத்திலும் உளதாய) அன்பும், நாண் - (பழி பாவங்களுக்கு) நாணுதலும், ஒப்புரவு - (யாவருக்கும் உபகாரம் செய்தலும், கண்ணோட்டம் - (பழக்கம் உள்ளோரிடத்துக்) கண்ணோடலும், வாய்மையோடு - (எவ்விடத்தும்) உண்மை பேசுதலும் என, சால்பு - சால்பு என்னும் பாரத்தை, ஊன்றிய - தாங்கிய, தூண் - தூண்கள், ஐந்து - ஐந்தாம்.

(க-து) அன்பு முதலிய ஐந்து குணங்களும் சான்றோர்க்கு இன்றியமையாத குணங்களாம்.

கண்ணோட்டம் - தாட்சண்ணியம்.

103. குடிசெயல் வகை

[பிறந்த குடியை உயரச்செய்தலின் வகை]

59. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானை
சுற்றமாச் சுற்றும் உலகு.

(உ-டை) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானை உலகு சுற்றமாச் சுற்றும்.

(ப-ரை) குற்றம் - குற்றங்களை, இலன் ஆய் - செய்யாதவனாகி, குடி செய்து - (தன்) குடியை உயரச்செய்து, வாழ்வானை - வாழ்பவனை, உலகு - உலகத்தார், சுற்றம் ஆ - (அவனுக்குச்) சுற்றமாக வேண்டி, சுற்றும் - (தாமே சென்று) சூழ்வர்.

(க-து) குற்றம் இல்லாதவனாய்க் குடியை உயரச் செய்து வாழ்பவனை உலகத்தவர் சுற்றத்தவர்போலச் சூழ்வர்.

104. உழவு [உழுதல் தொழில்]

60. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(உ-டை) கை செய்து ஊண் மாலையவர் இரவார்; இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர்.

(ப-ரை) கை - (தம்) கையால், செய்து - உழுது, ஊண் - உண்ணுதலை, மாலையவர் - இயல்பாகவுடையவர், இரவார் - (பிறரைத் தாம்) யாசியார்; இரப்பார்க்கு - (தம்மை) யாசிப்பவர்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது) ஒன்றை, கரவாது - ஒளிக்காமல், ஈவர் - கொடுப்பார்.

(க-து) உழுதுண்பவர் பிறரிடம் யாசிக்கமாட்டார்; தம்மிடம் யாசிப்பவர்க்கு இல்லையென்னாது கொடுப்பார்.

—o—

# கேள்விகள்

( இறுதி எண்—குறள் எண் )

1. மனக்கவலை மாற்றுதல் யாருக்கு அரிது? (1)
2. 'ஈன்றபொழுதின் பெரிது உவக்கும்.' யார்? ஏன்? (3)
3. அன்பை வெளிப்படுத்துவது எது? (4)
4. யார் வீட்டில் இலக்குமி தங்கி இருப்பாள்? (6)
5. ஒருவனுக்கு அணியாவது யாது? (7)
6. உலகத்தைவிடப் பெரியது எது? (8)
7. வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல வியாபாரமாவது யாது? (9)
8. ஒரு நாளை இன்பம் யாருக்கு உண்டாகும்? இறக்கும் துணையும் புகழ் யாருக்கு உண்டாகும்? (13)
9. பொறுமையால் வருங் குற்றமென்ன? (14)
10. யாரை இலக்குமி அடைவாள்? (15)
11. 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று' இது எதற்காக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது? (18)
12. உயிர்க்கு ஊதியமாவது யாது? (20)
13. யாருடைய தவவேடத்தால் பயனில்லை? (21)
14. 'உள்ளத்தால் உள்ளலும் தீது' - எது? (22)
15. சான்றோர்க்கு எவை விளக்கல்ல? எது விளக்காகும்? (23)
16. அரசனுக்குரிய நான்கு குணங்கள் யாவை? (26)
17. கற்றாரைக் கண்ணுடையரென்றும், கல்லாதவரைப் புண்ணுடையரென்றுங் கூறக் காரணம் என்ன? (27)
18. 'அரங்கின்றி வட்டாடி யற்று.' - எது? (29)
19. அறிவுடையார் யார்? அறிவில்லாதார் யார்? (31)
20. அரசனுக்கு வலியுடைமை எல்லாவற்றுள்ளும் மேலானது எது? (33)
21. (1) "பீலிபெய் சாகாடும்," (2) நெடும்புனலுள்" என்னுந் தலைப்புள்ள குறள்கள் உணர்த்தும் பொருள்கள் யாவை? (35, 37)
22. கட்டளைக்கல்லாவது யாது? அது எதற்காகக் கூறப்பட்டுள்ளது? (38)
23. அரசனுக்கு எது வெற்றியைத் தராது? எது வெற்றியைத் தரும்? (41)
24. தன் பகைவர்க்கு அடிமை புகுத்திவிடுவது எது? (44)

25. ‘துன்பம் உறுதல் இலன்.’ யார்? (46)
26. மந்திரியாவான் யார்? (47)
27. எதைவிட எது சிறந்தது? (48)
28. எது சிறந்த நாடாகும்? (52)
29. அறிவுடையார் நட்பு எதைப்போன்றது? அறிவில்லார் நட்பு எதைப்போன்றது? (53)
30. யாருடைய நட்பைக் கொள்ளவேண்டும்? யாருடைய நட்பைத் தள்ளவேண்டும்? (54)
31. கவரிமானின் தன்மை என்ன? அது எதற்காகக் கூறப்பட்டுள்ளது? (56)
32. சால்பூன்றிய ஐந்து தூண்கள் யாவை? (58)
33. உழுதுண்பவரின் இயல்பு என்ன? (60)
34. 1. “முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.”
2. “தாம்கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு.”
3. “மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு.”
4. “அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.”
இக்கருத்துக்கள் அமைந்த குறட்பாக்களை அடிபிறழாது எழுதுக. (25,28,36,51)
35. கீழ்க்கண்ட சொற்களுக்குப் பொருள் எழுதுக:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தாள் | (1) | 16. | புனல் | (37) |
| 2. | ஆர்வலர் | (4) | 17. | கருமம் | (38) |
| 3. | செய்யாள் | (6) | 18. | மாநிலம் | (39) |
| 4. | அணி | (7) | 19. | பொச்சாவா | (40) |
| 5. | ஞாலம் | (8) | 20. | கோல் | 41) |
| 6. | அழுக்காறு | (14) | 21. | துளி | (42) |
| 7. | திரு | (15) | 22. | அளி | (42) |
| 8. | கேளிர் | (16) | 23. | மடிமை | (44) |
| 9. | வன்கணவர் | (19) | 24. | அசாவாமை | (45) |
| 10. | இசை | (20) | 25. | இடும்பை | (46) |
| 11. | வெகுளி | (24) | 26. | நல்குரவு | (48) |
| 12. | அரங்கு | (29) | 27. | பளிங்கு | (51) |
| 13. | கோட்டி | (29) | 28. | கேண்மை | (53) |
| 14. | தமர் | (33) | 29. | கண்ணோட்டம் | (58) |
| 15. | சாகாடு | (35) | 30. | இரவார். | (60) |

86703

# திருக்குறள் வெளியீடு

[நூலையும் ஆசிரியரையும்பற்றிய முன்னுரை, குறள்களின் அதிகாரப் பெயர், அதன் பொருள், மூலம், உரைநடை(Prose order), பதவுரை, கருத்துரை, விளக்கவுரை, பயிற்சி வினாக்கள் முதலியன அடங்கியவை]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருக்குறள் | (ஐம்பது) - | I-ம் பாரம் | 6-ம் | வகுப்பு | 3 அணா |
| ,, | (அறுபது) - | II-ம் ,, | 7-ம் | ,, | 3½ அணா |
| ,, | (எழுபது) - | III-ம் ,, | 8-ம் | ,, | 4 அணா |
| ,, | (எண்பது) - | IV-ம் ,, | | | 5 அணா |
| ,, | (நூறு) - | V-ம் ,, | | | 6 அணா |

## V. S. வெங்கடராமன் கம்பெனி

ஸ்ரீ வேதவிநாயகர் தெரு

கும்பகோணம்